பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 24 | திங்கட்கிழமை | 11.09.2023 | அதிர்வு 41

### நல்லூர் கோயிலுக்குச் சென்ற போது

## விபத்தில் சிக்கிய மூதாட்டி மரணம்!

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், நல்லூர் கோயிலுக்குச் சென்றபோது மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த மூதாட்டி 02

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையில் நம்பிக்கையில்லை

## சர்வதேச விசாரணையே வேண்டுமென எதிரணி வலியுறுத்து

"நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் முன்வைக்கப்படும் விடயங்களில் இதுவரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படவில்லை. இதற்குப் பின்னரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக சனல் 4 வீடியோ தொடர்பான விசாரணை நடுநிலையாக நடத்தப்படும் என எதிர்பார்க்க முடியாது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

எனவே, சனல் 4 வெளிக்கொணர்ந்த விடயங்கள் தொடர்பில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய, 02



## 'சனல் 4' குறித்து முதலில் உள்ளக விசாரணை

# தேவையேற்பட்டாலே சர்வதேச விசாரணை

## பிரதமர் தினேஷ் அறிவிப்பு

- சுடர் திலீபன் -

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய முதலில் உள்ளக விசாரணை நடைபெறவுள்ளது. குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 06



## "ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் திசை திருப்பாதே!"

# பிள்ளையானுக்கு ஆதரவு தெரிவித்து கட்சியின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

(க.சரவணன்)

"ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் திசை திருப்பாதே உண்மையை உலகறியச் செய்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு கட்சி காரியாலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி காந்தி பூங்கா வரையும் சென்றது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் ஆஸாத் மௌலானா சனல் 4 ஊடகத்துக்கு உயிர்த்த 10

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு எமது ஆட்சியில் மன்னிப்பு கிடையாது


## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்

– சுடர் திலீபன் –

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சகலருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசில் எந்த மன்னிப்பும் கிடையாது." 06



## இரகசியம்



'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய முதலில் உள்ளக விசாரணை நடைபெறவுள்ளது.

"இந்த விவகாரம் தொடர்பில் தேவையேற்பட்டால் 02

## நாடாளுமன்றத் தெரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையான விசாரணைகளே அவசியம் என்றும், அதற்கமைவாகவே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றே தற்போது நாட்டில் உள்ளது. இந்த நாடாளுமன்றம் தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது.

அதேபோன்றுதான் சுகாதார அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் பிரேரணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குத் தீர்வு கிடைத்து விட்டதா?

மருந்துத் தட்டுப்பாடு பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளதா? மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை தடுக்கப்பட்டுள்ளதா?

தரமற்ற மருந்துகள் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நியாயம் கிடைத்துள்ளதா? இல்லை. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் ஆதரவு மூலம் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. அது மாத்திமே இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து துன்பப்படும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வில்லை.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வீடியோ மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயம் என்ன? இதனூடாக சர்வதேச சமூகம் என்ன எதிர்பார்க்கின்றது? இந்தத் தாக்குதலின் பின்னணியில் சந்தேகங்களும், குழப்பங்களும் காணப்படுகின்றன.

இதனை ஆராய வேண்டியுள்ளது. இதில் பாரிய பொறுப்பு இருக்கின்றது. ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நீண்ட நாட்கள் கடந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். குறிப்பாக இந்தச் செய்தியை வெளிப்படுத்தியவர்கள் மீது சாடுவதை நிறுத்தி விட்டு அதில் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது எனக் கண்டறிந்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும்.

நாட்டு மக்கள், சர்வதேசம் நம்பக் கூடிய நியாயமானதும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணையே வேண்டும்.

நாடாளுமன்றத்தெரிவுக்குழுஅமைத்து இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணைகள் மறைக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மையும் கூட. இவற்றின் மூலம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை." – என்றார்.

## விபத்தில் சிக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நல்லூர் குறுக்கு வீதியைச் சேர்ந்த இரத்தினசாமி நித்தியசெல்வம் (வயது – 74) என்ற ஒரு பிள்ளையின் தாயான மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த மூதாட்டி கடந்த 4ஆம் திகதி இரவு 7 மணிக்கு நல்லூர் கோயிலுக்குச் செல்வதற்காக யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியைக் கடந்தபோது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது.

விபத்துக்குள்ளாகிய அவர் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்திரமே சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப்படும்."

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

அவர் குறிப்பிடும் உள்ளக விசாரணை என்பது நாடாளுமன்றத் தெரிவுக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு போன்றவைதான். இவை காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயம் என்பது வெளிப்படை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இப்போதைய பதவிக்காலம் இன்னும் ஒரு வருடம்தான். அதற்கு மேல் ஒரு மாதம் கூட இல்லை.

இனிமேல் அவர் ஜனாதிபதி ஆணைக் குழுவையும், நாடாளுமன்றம் இதற்காகத் தெரிவுக்குழு ஒன்றையும், நியமித்து, இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தால், அவை தத்தமது விசாரணைகளை பூர்த்தி செய்ய முன்னர் இப்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்து விடும்.

இப்போது இருப்பவரே மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்றாலும் அல்லது புதிய ஒருவர் ஜனாதிபதியாக வந்தாலும், அடுத்த பதவியை ஏற்பவர் தமது வசதிக்காக இருக்கும் நாடாளுமன்றத்தை உடனே கலைத்து பொதுத் தேர்தலுக்குப் போவார் என்றே நம்பப்படுகின்றது. அத்தகைய நிலையில் இப்போது நியமிக்கப்படும் தெரிவுக் குழு அரைப் பயணத்தில் காலாவதியாகிவிடும்.

எனினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முடிவின் அடிப்படையில், ஜனாதிபதி பதவியில் இருப்பவர் மாறினாலும், மாறாவிட்டாலும் இப்போது புதிதாக நியமிக்கப் படவிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு மட்டும் தனது விசாரணைகளைத் தொடரலாம். தொடரும்.

ஓரிரு ஆண்டுகள் கழித்து அதன் அறிக்கை வரும்போது அரசியல் சூழ்நிலை எப்படி இருக்குமோ, என்ன ஆகுமோ தெரியாது.

இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸா அப்போது ஜனாதிபதியாக இருந்தால், அவர் ஜனாதிபதியானதும் இப்போது தாம் கூறுரைத்திருக்கின்றவாறு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு எதிரான தமது கிடுக்குப் பிடியை அவர் ஆரம்பித்து இருப்பார். இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முடிவுக்கு அவர் காத்திருக்க மாட்டார் என்பது திண்ணம்.

இந்த விவகாரத்தை – ஈஸ்டர் குண்டு தாக்குதல் விவகாரத்தை – ஒட்டி முன்னரும் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவே அதை நியமித்தார். ஆனால் அவரின் பதவிக் காலம் முழுவதும் அந்த ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியது. கடைசியாக அது விசாரணை அறிக்கையைப் பூர்த்தி செய்த போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகியிருந்தார். அவரிடமே அந்த ஆணைக்குழு தனது அறிக்கையைக் கையளித்தது.

அதனாலோ என்னவோ, அவரை ஆட்சி பீடத்தில் ஏற்றும் நோக்கத்தில் அந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டிருக்கலாம் என்று முன்னைய நாடாளுமன்றத் தெரிவுக் குழு குறிப்பிட்ட சாத்தியம் குறித்து அந்த ஜனாதிபதி ஆணைக்குழு ஏதும் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் அது தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்த போது ஜனாதிபதி பதவியில் மைத்திரிபால சிறிசேன இல்லாதமையால் என்னவோ அவரைத் தயவு தாட்சண்யமின்றி வாங்கு வாங்கு என்று வாங்கித் தள்ளியிருந்தது அந்த ஆணைக்குழு. தம்மை நியமித்த ஜனாதிபதி அவர்தான் என்பதைக் கூட கரிசனையில் – கவனத்தில் – எடுக்காத சாட்டையடி அது.

இப்போதும் கூட, புதிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கின்றார். நிச்சயம் அவரின் தற்போதைய பதவிக்காலம் பூர்த்தி அடைந்த பின்னரே அதன் இறுதி அறிக்கை வெளிவரும் சாத்தியம் உண்டு. அப்படி வெளிவரும்போது ரணில் ஜனாதிபதி பதவியில் இருப்பாரோ என்னவோ...? அல்லது தாம் நியமித்த ஆணைக்குழுவிடம் தாமே வாங்கிக் கட்டிக் கொண்ட மைத்திரிபால சிறிசேனவின் அனுபவம் ரணிலுக்கும் ஏற்படுமோ என்னவோ...? எல்லாம் ஆண்டவனுக்குதான் வெளிச்சம்...!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.

"முதலில் உள்ளக விசாரணைதான் நடைபெறும். இந்த விவகாரம் தொடர்பில் தேவையேற்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப் படும்." – என்று இப்போது பிரதமர் கூறுவது அர்த்தமற்றது. அப்படி ஒன்று நடக்காது. தேவையேற்பட்டால் சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப்படும் என்று கூறப்படுவது போல, ஒரு தேவை ஏற்படும் காலம் வரை, அத்தேவையை நிறைவு செய்ய இந்த ஜனாதிபதியையும் இந்தப் பிரதமரையும் கொண்ட இந்த அரசு நீடிக்காது. அதனால் அது பற்றி – சர்வதேச விசாரணை பற்றி முடிவெடுக்கும் இக்கட்டு வரை – தாங்கள் ஆட்சியில் நீடிக்க மாட்டார்கள் என்ற யதார்த்தம் புரிந்து கொண்டு பிரதமர் பேசியிருக்கின்றார். அவ்வளவுதான்.



# அடித்து நொறுக்கப்பட்ட வீட்டை மீள அமைக்க நிர்வாகம் அனுமதி

## களத்துக்கு விரைந்து ஜீவன் அதிரடி

– அவிசாவளை நிருபர் –

இரத்தினபுரி, கஹவத்த – வெள்ளந்துர தோட்டத்தில் நடைபெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அதே இடத்தில் வீட்டை அமைப்பதற்கான அனுமதியை அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அத்துடன், அடாவடிதனமாக நடத்து கொண்ட, தோட்ட நிர்வாகத்தால் அனுப்பட்டதாகக் கூறப்படும் நபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இரத்தினபுரி, கஹவத்த – வெள்ளந்துர தோட்டத்தில் தமிழ்க் குடும்பம் வாழ்ந்து வந்த வீட்டை கஹவத்தை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் வெள்ளந்துர தோட்ட நிர்வாகம், காடையர்களைக் கொண்டு அடித்து நொறுக்கியுள்ளது.

இது தொடர்பில் தோட்ட மக்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாளிடம் தெரிவித்ததை அடுத்து, அவர் உடனடியாகக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான், கஹவத்தையில் அமைந்துள்ள குறித்த தோட்டத்துக்கு நேற்று மாலை நேரடியாக விஜயம் செய்தார்.

தோட்ட அதிகாரியின் பங்களாவுக்குச் செல்லும் பாதையை மறித்து தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போதிலும், அமைச்சர் ஜீவன் தொண்டமான் தோட்டத்துக்கு வருவதைத் தெரிந்துகொண்ட குறித்த தோட்டத்தின் முகாமையாளர் தலைமறைவாகினார்.

அதனைத் தொடர்ந்து, வெள்ளந்துர தோட்டத்துக்கு வருகை தந்த அமைச்சருடன் மக்கள் தமக்கு நிகழ்ந்த அநியாயங்கள் குறித்து எடுத்துரைத்ததுடன், இந்த விடயம் தொடர்பில் காஹவத்தை பெருந்தோட்டக் கம்பனியின் நிறைவேற்று அதிகாரியுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடி, குறித்த வீட்டை அமைப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொடுத்ததுடன், அந்த வீட்டுக்கு அத்துமீறி சேதங்களை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை, அந்த வீட்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த சித்தியைப் பெற்றுள்ள யுவதிக்குப் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப் பரிசில் ஒன்றையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், எதிர்வரும் காலங்களில் குறித்த தோட்டத்துக்கு வீடமைப்புத் திட்டத்தைப் பெற்றுக்கொடுப்பதாகவும் மக்களிடம் உரையாடும்போது அமைச்சர் உறுதியளித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம். நிரஞ்சன் குமார், கஹவத்தை மாவட்ட தலைவர் பத்மநாதன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் சென்றிருந்தனர்.

# மோ.சைக்கிள் விபத்தில் புதுமணத் தம்பதி மரணம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனும், மனைவியும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை – வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் திருமணம் முடித்த இருவரும் மோட்டார் சைக்கிளில் உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியுள்ளனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் இருந்த மரமொன்றுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 31 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 28 வயதுடைய மனைவி வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் வீரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். திருமணம் முடிந்து ஒரு வாரமே ஆன நிலையில் புதுமணத் தம்பதியினர் விபத்தில் உயிரிழந்த சம்பவம் அப்பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூரான் தங்கரத்தில் வீதியுலா



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் 21ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக முருகப்பெருமான் வேல்விமானத்தில்(தங்கரத்த்தில்) வீதியுலா வந்தார்.
படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்













# மட்டக்களப்பில் வாங்கிய மதுவுக்கு பணம் தராது டிமிக்கி கொடுத்த இன்ஸ்பெக்டர் இடைநிறுத்தம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் மதுபானசாலையில் மதுபானத்தை வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காது ஓட்டோவில் தப்பி ஓடிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சேவையில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இடை நிறுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டு நகரிலுள்ள மதுபானசாலைகள் இரண்டில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் ஓட்டோவில் சென்று மதுபானசாலையில் தலா அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டுப் பணம் ஓட்டோவில் இருப்பதாகவும் கொண்டுவந்து தருவார் எனவும் தெரிவித்து மதுபானத்தை வாங்கிக் கொண்டு பணத்தை கொடுக்காது ஓட்டோவில் தப்பி ஓடிய சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியமையுடன் அது பற்றிய செய்தி ஊடகங்களிலும் வெளியாகியது.

வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சம்பவதினம் பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டக்களப்பிற்குச் செல்கிறார் எனக் கடமைக் கையேட்டில் பதிவிட்டுவிட்டு வெளியேறி, இந்த மோசடியில் ஈடுபட்ட பின்னர் அவர் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பாது தலைமறைவாகியுள்ளார்.

இந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏற்கனவே தங்க மாலை அறுத்த குற்றச்சாட்டு உட்பட 7 குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஏழு தடவைகள் பணி இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு கடமையாற்றி வருபவர் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய அவர், உடனடியாகப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

# பெருந்தோட்டக் கம்பனிகள் காட்டுமிராண்டித்தனம்!

## திகாம்பரம் எம்.பி. கடும் கண்டனம்



இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டச் சம்பவம் மிலேச்சத்தனமானது என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இரத்தினபுரி மாவட்டத்தில் காவத்த பெருந்தோட்டக் கம்பனி நிர்வாகத்தின் கீழ் இருக்கும் வெள்ளந்துர தோட்டத்தில் ஒரு குடியிப்பாளரின் குடியிருப்பு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது மிலேச்சத்தனமானது. இது பெருந்தோட்டக் கம்பனிகளின் சர்வாதிகாரப் போக்கையும், அவர்களின் காட்டுமிராண்டித்தனத்தையும் காட்டுகின்றது.

மாத்தளை – ரத்வத்த தோட்டத்தில் அசம்பாவிதம் நடந்து ஒரு மாதம்கூட செல்லாத நிலையில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருப்பது அரச கட்டுப்பாட்டுக்குள் பெருந்தோட்டக் கம்பனிகள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்திருக்கின்றது.

200 வருடங்கள் அல்ல 300 வருடங்களானாலும் பெருந்தோட்டக் கம்பனிகளின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. அவர்களின் கடும் போக்கும் மாறப்போவதுமில்லை.

அரசும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறும்போது வேடிக்கையாளர்களாக இருக்கின்றதே தவிர உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. மாத்தளை – ரத்வத்தை சம்பவத்துக்குச் சரியான சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இவ்வாறு இடம் பெற்றிருக்காது.

தொடர்ந்தும் அரசு வேடிக்கை பார்க்காது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றுள்ளது.

# வடக்கு ஆளுநர் மிகத் துணிச்சலான பெண்மணி; அவர் மாற்றப்படவே கூடாது என்கின்றார் செல்வம்



வடக்கு ஆளுநர் துணிச்சலான பெண்மணி. அவர் மாற்றப்படக் கூடாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் ஒருவர் “வடக்கு ஆளுனர் விரைவில் மாற்றப்படுவார் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?” – எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடமாகாண ஆளுநர் அவர்கள் முன்னரும் வடக்கின் ஆளுநராக இருந்த பொழுது சரியாகச் செயற்பட்டவர். தற்போதும் அவருடைய செயறபாடுகள் மிகச் சரியானதாக அமைந்திருக்கின்றன. அவர் மாற்றப்படுகின்ற சூழல் இருக்க முடியாது. ஏன் எனில் ஒரு பெண்மணி. துணிச்சலாக பல விடயங்களை செய்பவர்.



நாங்கள் அவரிடம் சென்று எங்களது கோரிக்கையை முன் வைக்கின்ற போது அவர் தன்னுடைய ஆளுமைக்கு உட்பட்ட விடயங்களை செய்வதற்கு தயங்கமாட்டார். அந்த வகையில் வந்து சிறிது காலத்தில் அவர் மாற்றப்படக் கூடாது. ஏன் அவர் மாற்றப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் சொன்னார் என தெரியவில்லை. ஆனால் நான் அந்த கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. – எனத் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காலத்தை இழுத்தடிக்கும் தந்திரம்

தெற்காசிய அரசியலுக்கு என்றே ஒரு முறைமை உண்டு. ஓர் அரசியல் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணாமல், அதை இழுத்தடிப்பது என்றால் அது தொடர்பில் ஓர் ஆணைக் குழுவை நியமித்து, அது குறித்து விசாரிக்கும்படி கோருவதுதான் அந்தத் தந்திரோபாயம்.

ஏதோ அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கம் இருப்பது போல அது காட்டும். சம்பந்தப்பட்ட ஆணை குழுவும் நிதி, நேரம் எல்லாம் விரயம் செய்து, விசாரணைகளை நடத்தும். அப்படியே காலம் இழுபட விடயம் நீர்த்துப் போகும் அல்லது முக்கியத்துவம் குன்றி அடங்கிவிடும். ஆணைக்குழுவும் இடைக்கால அறிக்கை, இறுதி அறிக்கை என்று ஆரவாரப்படுத்தினாலும், பல சமயங்களில் அவை அம்பலமாகா. பெரிய இழுபறிக்கு பின்னர் அவை வெளியானாலும் கூட, பெரும்பாலும் அவை வெறும் அறிவிப்புக்கள், அறிவித்தல்களோடு, வெள்ளைக் காகிதத்தில் கறுப்பு மையில் அச்சிட்ட ஆவணமாக அடங்கிப் போய்விடும்.

இப்போதும் கூட பெரும் பரபரப்பு ஏற்படுத்தியிருக்கும் ஈஸ்டர் குண்டு தாக்குதலை ஒட்டிய 'சனல்-4' காணொலியின் வெளிப்படுத்துகை தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணை குழு ஒன்றை ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிப்பார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேசமயம் இந்த ஆணைக் குழுவுக்கு மேலதிகமாக இவ்விடயம் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் நியமிக்கப்பட இருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் இப்போது குற்றச்சாட்டு ராஜபக்ஷக்கள் மீதே விழுந்திருக்கிறது. இப்போதைய நாடாளுமன்றம் இன்னும் ராஜபக்ஷக்களின் பிடியிலேயே உள்ளது. இந்தச் சமயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் இதனை விசாரிக்க முனைவது, குற்றவாளியே குற்றம் குறித்து விசாரணை செய்வதற்கு ஒப்பானது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கூறுவதும் கவனிக்கத்தக்கது.

இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு. இதே ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் குறித்து ஒரு ஜனாதிபதி ஆணைக் குழுவும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் நியமிக்கப்பட்டு, விடயம் விசாரிக்கப்பட்டது. ஆனால் பலன் ஏதுமில்லை. இப்போது இரண்டாவது தடவையாகவும் அவை ஒவ்வொன்றும் நியமிக்கப்பட உள்ளன.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படவில்லை, உண்மை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்துகின்றார்.

ஒரு தரப்பு ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காக இந்தக் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம், ஆகவே அந்தக் கோணத்தில் இந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்னைய நாடாளுமன்றத் தெரிவுக் குழு கூறியிருந்தது. ஆனால் அந்த திசையில் விசாரணை நடக்கவில்லை.

ஆயினும், அப்படி ஒரு நோக்கத்தில்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற உண்மையை வெளிப்படையாகப் போட்டடித்து 'சனல்- 4' இப்போது சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றது.

முன்னர் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பெறுபேறுகள், அனுபவங்கள் போன்றவையும், இனி நியமிக்கப்பட போகின்ற அத்தகைய ஆணைக்குழு மற்றும் தெரிவுக் குழு போன்றவற்றினால் கிட்ட போகின்ற அனுபவமும் ஒன்றாகத்தான் இருக்கும். அது - இவற்றால் பயனே ஏதும் விளையப்போவதில்லை, வெறும் காலத்தை இழுத்தடிக்கும் அரசியல் சித்து விளையாட்டே இந்த நகர்வுகள் என்ற படிப்பினைதான்.

## தேவையேற்பட்டாலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விவகாரம் தொடர்பில் தேவையேற்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை முன்வைத்து அரசியல் நடத்த எவருக்கும் இடமளியோம் என்றும், ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

இதேவேளை, சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உண்மையைக் கண்டறியவும் நீதியை நிலைநாட்டவும் சாதகமான நடவடிக்கையாக ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாசகார ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் இருக்கிறார் என முன்னாள் சட்டமா அதிபர் இதே போன்ற குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். எனவே, இந்த நிலைமை எரியும் நெருப்பில் வைக்கோல் சேர்ப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்தப் பிரச்சினைகளை பரந்தளவில் கவனத்துக்குக் கொண்டு வந்து அவற்றை விரைவாகத் தீர்ப்பதற்காக, இந்தத் தூண்டுதல் ஏற்படுத்தும் கூற்றுக்களை விசாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும் அரசு உத்தேசித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

"தற்போதைய நிலைமையின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள இந்த இரண்டு அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன." – என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தென்னிலங்கை பிக்குகள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அரசியல் ஆதாயம் மற்றும் சேறு பூசும் பிரசாரங்களிலிருந்து விடுபட்ட முற்போக்கான, மேம்பட்ட தீர்வே தேவை. உண்மையை மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். அந்த உண்மையில் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும்.

2019 ஜனாதிபதித் தேர்தலிலும், 2020பொதுத் தேர்தலிலும் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த உண்மையை தற்போதைய அரசு வெளிப்படுத்தவில்லை.

மகா சங்கத்தினர் தலைமையிலான சமயத் தலைவர்கள் எவ்வளவோ குரல் எழுப்பியும் அரசு அவர்களின் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை. தற்போது அனைத்தும் பொய்யாகிவிட்டன.

பயங்கரவாதிகளைக் கைது செய்ய ஆணை கிடைத்த நாள் முதல் இன்று வரை தகவல்களை மறைப்பதும் ஏமாற்றுவதுமே இடம்பெற்று வந்துள்ளன. நாம் சர்வதேச விசாரணையை விரும்பமில்லை என்றாலும், இது குழப்பமாகிவிட்டதால், முறையான சர்வதேச விசாரணையின் மூலம்தான் உண்மையைப் புரிந்துகொள்ள முடியும் என நம்புகின்றோம்." – என்றார்.

# வவுனியாவில் ஆலய மகோற்சவத்தின் போது போதையில் போத்தலுடன் வந்த குருக்கள்!

## மாவாவும் அவரிடமிருந்து மீட்கப்பட்டதாம்



வவுனியாவில் ஆலயம் ஒன்றின் வவுனியாவில் ஆலயம் மது போதையில் மாவா மற்றும் சாராயப் போத்தலுடன் ஆலயத்திற்கு வந்த குருக்கள், பக்தர்களால் எச்சரிக்கப்பட்டு விரட்டியடிப்பு

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவத்தின் போது குருக்கள் ஒருவர் மது போதையுடன் வருகை தந்திருக்கின்றார். அவரிடமிருந்து சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலய பக்தர்களால் மீட்கப்பட்டன. குருக்கள் பின்னர் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. அந்த மகோற்சவத்திற்கு வருகை தந்த குருக்கள் மது போதையில் ஆலயத்திற்கு சென்று பூஜை செய்தமையுடன், அங்குள்ள மக்களுடனும் முரண்பட்டுள்ளார்.

குருக்கள் மது போதையில் இருந்துள்ளமையுடன், அவரிடம் இருந்து சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலயப் பக்தர்களால் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்து ஆலய பக்தர்கள் பிறிதொரு குருக்களை அழைத்து, அவரிடம் இந்தக் குருக்களை ஒப்படைத்து ஆலயத்தில் இருந்து அவரை வெளியேற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் மாவட்ட அந்தணர் ஒன்றியம், மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து காலாசார உத்தியோகத்தர் ஆகிய தரப்புகளிடமும் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் சில குருமார் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் அண்மைகாலமாக தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மொறவெவ பன்குளம் பகுதியில் திடீரென முளைத்த பிள்ளயார்!

திருகோணமலை மொறவெவ பகுதியில் இனம் தெரியாதோரால் பன்குளம் 4ஆம் கண்டம் பிரதான வீதியின் அருகில் திடீரென பிள்ளையார் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றுக் காலை அப்பகுதி மக்கள் மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்தனர். அதை அடுத்து மொறவெவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த இடத்தில் புத்தர் சிலை மற்றும் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்த நிலையில் கிராம மக்களினால் அந்த இடத்தில் இரு சிலைகளும் தேவை இல்லை எனத் தெரிவித்தனர். அதையடுத்து அவை அகற்றப்பட்டன.

இருந்த போதிலும் நேற்றைய தினம் அந்த இடத்தில் அடையாளம் தெரியாதோரினால் பிள்ளையார் சிலை மாத்திரம் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இன முறுகலை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட வேலையென அப்பகுதியில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் தமிழ் -.சிங்கள இனத்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இக்கால கட்டத்தில் இவ்வாறான செயல்கள் எல்லாம் இன நல்லுறவைச் சீர்குலைக்கும் விதத்தில் அமையப் பெற்றுள்ளன எனவும் குறித்த இடத்தில் புத்தர் சிலையோ, பிள்ளையார் சிலையோ தேவை இல்லை எனவும் அப்பகுதியில் உள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர்.

Build Your Dream home with us

NORTH WALL ENGINEERING

Nelliyady, Jaffna.

Our Recent Projects



"Experience a professional service like no other"

Our Services
- Architectural Designing.
- Structural Planning.
- 2D & 3D Drawing.
- BOQ Assessment.
- Interior Designing.
- Landscaping.

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

# இராணுவப் பாதுகாப்பில் இருக்கும்

# மட்டு. ஷரியா பல்கலைக்கழகத்தில் இருந்து கணனிகளைச் சுருட்டிய 2 சிப்பாய்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகத்தில்

இருந்து கணனிகளைத் திருடிச் சென்றவர்கள் என்று கூறப்படும் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் உட்பட 3 பேரை வெலிகந்தை வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும், இவர்களிடமிருந்து 5 கணனிகள் மற்றும் 80 மின்விளக்குகளை தாங்கள் மீட்டுள்ளனர் எனவும் வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகம் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினால் பெறுப்பேற்க்கப் பட்டது. அங்கு பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் அமைக் கப்பட்டு பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த காலத்தில் கொரோனா சிகிச்சை மத்திய நிலைய மாகவும் அது செயற்பட்டு வந்தது. இப்போதும் அது இராணுவப் பாதுகாப்பில் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் இந்தக் கட்டடத்தில் காவல் கடமையாற்றி வந்த இரு இராணுவத்தினர் கடமை நேரத்தில் அங்கிருந்த 5 கணனி மற்றும் 80 மின் விளக்குகளைத் திருடி அவற்றைப் "பாசல்" செய்து வைத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து இருவரும் கடமையில் இருந்து லீவில் வீட்டுக்குச் சென்று, லீவு முடியும் முன்னர் பல்கலைக்கழகக் கட்டடத்துக்குத் திரும்பி நேற்றுவ அதிகாலை ஓட்டோ ஒன்



றில், தாங்கள் ஏற்கனவே பாசல் செய்து வைத்திருந்த கணனி மற்றும் மின்விளக்குகளை கொண்டு சென்ற சமயமே மாட்டியிருக்கின்றனர். வெலிகந்தை வீதிசோதனைச் சாவடியில் பொலிஸார் அந்த ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்டபோது உண்மையைக் கண்டு பிடித்து இராணுவச் சிப்பாய் இருவ ரையும்,ஓட்டோச் சாரதியையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் வெல்லவாய மற்றும் குரு நாகலைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிகின்றது.

இந்தப் பல்கலைக்கழகத்தை இராணுவம் பொறுப்பேற்ற பின்னர் பல லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்கள் திருட்டுப்போயுள்ளன எனப் பல்கலைக்கழக முகா மையாளர் பொலிஸ் நிலையத்தில் 5 முறைப்பாடுகளைச் செய்துள்ளார் எனவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எவருக்குமே உண்மையாக இருக்க மாட்டார் மைத்திரி

## உதய கம்மன்பில கூறுகின்றார்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்க மாட்டார். சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணையும் முயற்சிக்கு தயாசிறி தடையாக இருந்த காரணத்தால் தயாசிறி கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்கமாட்டார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு நாள் இரவு மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைந்து அப்பம் சாப்பிட்டு விட்டு மறுநாள் காலை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடுவார் என அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூட மைத்திரிபால சிறிசேன உண்மையாக இருக்கவில்லை.

அரசமைப்புக்கு முரணாக மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த ஜனவரி மாதம் ஹெலிக்கொப்டர் சின்னத்தில் புதிய அரசியல் கூட்டணியை அமைத்தோம்.

கூட்டணியில் ஒன்றிணைந்து செயற்படுவார் எனக் குறிப்பிட்டு விட்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றம் அவருக்கு நட்டஈடு செலுத்த உத்தரவிட்டதன் பின்



னர் கூட்டணியில் இருந்து விலகினார்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் முயற்சியை அமைச்சு பதவி வகிக்கும் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ளார்கள்.

இதற்கு கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தடையாக இருந்தம்சியால் தற்போது அவரைக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

ஆகவே சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு செயற்பாடாமல் இருந்தால்தான் ஆச்சரியடைய வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் தரப்பினரை ஒன்றிணைத்து பலமான அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம். - என்றார்.



- என்.புவியரசன் -

# இலங்கை விடயத்தில் பதுங்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

## இன்று ஜெனிவாவில் 54 ஆவது அமர்வு ஆரம்பம் ஆனால் இலங்கைத் தமிழர்கள் நம்பிக்கையிழப்பு

‘இலங்கையில் நிலவும் மனித உரிமைகள்’ குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை பாதிக்கப்பட்டவர்களின் நலனை மையப்படுத்தி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை. தாங்கள் கைவிடப்பட்டுள்ளோம் எனப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் கருதுகின்றனர்.

செப்டம்பர் 11ஆம் திகதியான இன்றைய தினம் (திங்கட்கிழமை) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில், அதன் ஆணையாளர் வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளில் பெரும்பாலானவை பழைய விடயங்களே. அவை தமிழர்களின் கவலைகள் மற்றும் தேவைகளுக்கான தீர்வு எதையும் முன்வைக்கவில்லை எனத் தமிழர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளான விகாரைகளின் கட்டுமானம், வளமான நிலங்களை தொடர்ந்து கையகப்படுத்தும் நடவடிக்கைகள், தமிழர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து நசுக்கப்படுவது போன்ற அம்சங்கள் இந்த அறிக்கையில் மிகக்குறைந்த அளவிலேயே பேசப்பட்டுள்ளன எனக் கூறும் அவர்கள், போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் குறித்து அந்த அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இல்லை என விசனத்துடன் சுட்டுகின்றனர்.

தமிழர்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட “உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” ஐ.ந. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த அறிக்கை “மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் அந்த மீறல்கள் மீண்டும் இடம்பெறாது என்ற உத்தரவாதத்திற்காக காத்திருக்கிறார்கள்” எனக் கூறினாலும், அவர்கள் தரப்பு கருத்தைப் பிரதிபலிக்காமல், அரசின் கூற்றை அங்கீகரிப்பது போலுள்ளது

ஆட்சிமுறை சீர்திருத்தங்கள், இணைக்கப்பாடு மற்றும் முன்னெடுப்பிலுள்ள சவால்களின் மூலம் இருக்கும் வாய்ப்புகள் பற்றி பேசும் அவரது அறிக்கை, அவற்றுடன் அர்த்தமுள்ள மற்றும் சுயாதீனமான பொறுப்புகூறல் செயல்பாடுகள் இருக்க வேண்டும் எனக் கூறினாலும், அப்படியான பொறுப்புக் கூறல் வழிமுறைகள் ஏதும் நடைமுறைபடுத்தப்படவில்லை என்பதை அது சுட்டிக் காட்டவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உண்மையைக் கண்டறியும் உள்ளக விசாரணைப் பொறிமுறைகளை தொடர்ச்சியாக நிராகரித்துள்ளனர். ஆனல், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையோ அவர்களின் விருப்பதற்கு எதிராக அதை நோக்கி தமிழர்களை தள்ளுவது போலுள்ளது.

தமிழ்த் தாய்மார்களால் தலைமையேற்று நடத்தப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், சர்வதேச நீதியே தமக்கு வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமான ஓகஸ்ட் 30 அன்று வெளியிட்ட அறிக்கையில் அவர்கள் இதை மீண்டும் தெரிவித்துள்ளனர். “நங்கள் உள்ளூர் வழிமுறைகளில் நம்பிக்கை இழந்து விட்டோம். அதன் காரணமாகவே வடக்கு, கிழக்கில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக அமைதியான முறையில் போராடி வருகிறோம். சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்”.

இதேவேளை அந்த அறிக்கை நாட்டின் தெற்கில் நடைபெறும் ஒடுக்குமுறையைப் பற்றி பேசுகிறது, ஆனால் பல தசாப்தங்களாக வடக்கு, கிழக்கில் அது நடைபெறுவது பற்றி மௌனம் காக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சிறுபான்மையினர் மீது மாத்திரமின்றி பொதுவாக அனைவர் மீதும் இந்த ஒடுக்குமுறை காணப்படுகிறது எனக் கூறுவது போலுள்ளது.

“இந்த இராணுவத்தினரும் பொலிஸூம் எம்மை சுற்றி தொடர்ந்து நிலைகொண்டிருப்பதும், நம்மை அச்சுறுத்தும் செயல்பாடானதும் எமக்கு மரண பயத்தையும் நம்முடன் இருக்கும் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் கவலைகொள்ள வைத்துள்ளது. இந்த பயம் நம்மை தினந்தோறும் ஆட்டிப்படைக்கிறது” என வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களின் சங்கம் தனது அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பொறுப்புக்கூறல் தொடர்பாக நடைபெற்ற கூட்டம் தோல்வியடைந்தது என ஜனாதிபதியே தெரிவித்துள்ள நிலையில், இலங்கை ஜனாதிபதியை நல்லிணக்கத்தை முன்னெத்துச் செல்வதில் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு பாராட்டியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி இணைக்கப்பாட்டை முன்னெடுப்பது தொடர்பில் உண்மையைக்கண்டறியும் பொறிமுறையை ஏற்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் இருக்கிறார் என ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை கூறுகிறது.

“அரச தகவல்களுக்கு அமைய ஜூலை மாதத்தில், அரச அமைப்புகள், சிவில் சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உட்பட பல தரப்புடன் கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளது” எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்த கலந்துரையாடல் பரந்துபட்டளவில் இடம்பெறவில்லை என்பதையும் அந்த அறிக்கை ஏற்றுக் கொள்கிறது.

“எனினும், இந்த கலந்துரையாடல்கள் இதுவரை விரிவாக இருக்கவில்லை, மற்றும் பாதிக்கபட்டவர்கள், அவர்களது சங்கங்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் குறிப்பிட்டுச் சொல்லக்

(10ஆம் பக்கம் பார்க்க...)

# கோப்பாயில் பஸ் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பலி



யாழ்ப்பாணத்தில் அதிசொகுசு பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கோப்பாய் – இராசபாதை வீதி சந்திக்கு அருகில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற கோப்பாயைச் சேர்ந்த எமில் ரவி (வயது 44) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சாவடைந்தார்.

விபத்தையடுத்து அதிசொகுசு பஸ்ஸின் சாரதி, பஸ்ஸை அவ்விடத்தில் விட்டு தப்பித்துச் சென்ற நிலையில், அவ்விடத்தில் கூடியோர் குழப்பத்தில் ஈடுபட்டு பஸ்ஸின் மீதும் தாக்குதல் நடத்தினர்.

அந்நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், விபத்து இடம்பெற்ற இடத்தில் கூடிய மக்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தி, உயிரிழந்தவரின் சடலத்தை பொலிஸ் ஓட்டோவில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

“விபத்து இடம்பெற்ற அதிசொகுசு பஸ் கொழும்பு – யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடுகின்றது. அதில் பயணிகள் இருந்தனர். விபத்தையடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பஸ்ஸைத் தாக்கியதுடன், பொலிஸாரையும் தாக்கினர். அதனால் அப்பகுதியில் கூடியவர்களை அகற்றினோம்” – என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடிய நிலைமாறுகால நீதி பொறிமுறை நிபுணர்கள் இதில் உள்வாங்கப்படவில்லை”.

எனினும், இந்த முழு பொறிமுறையில் முக்கிய பங்குதாரரான பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் நேரடியாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை மற்றும் இந்த பொறிமுறை திட்டமிடப்படும் போது அவர்களது கருத்துக்கள் ஒருபோதும் பரிசீலிக்கப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை இந்தக் கலந்துரையாடல் வழிமுறை தொடர்பில் தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தாலும், அப்படியான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் காத்திரமான பரிந்துரை ஏதும் அதில் இல்லை. சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சிறந்த நலன் தொடர்பில் உத்தேச, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் உதட்டளவில் வலியுறுத்தியுள்ளது.

அது மாத்திரமின்றி, உண்மையை கண்டறியும் வழிமுறையானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களால் நம்பும்படி இருக்க வேண்டுமென கூறும் அந்த அறிக்கை, அது நேர்மையான கலந்துரையாடல்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறுகிறது. மேலும் அதை நடைமுறைப்படுத்த அரசியல் திடசங்கற்பம் வேண்டும் என அந்த அறிக்கை கூறுகிறது.

“பாதிக்கப்படவர்கள் பழிவாங்கப்படும் அச்சமின்றி, தமது செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சுதந்திமாக இருப்பது மாத்திரமின்றி, அவர்கள் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதை செயற்படுத்தும் சூழ்நிலையிலும் இது நடைபெற வேண்டும்.”

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நடைமுறையில் இருப்பதால், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் பழிவாங்கப்படுவார்கள் என அஞ்சுகிறார்கள் மற்றும் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரியும் ஈர்க்கும் போராட்டங்களை நடத்தியமைக்காகவும், அற்பமான குற்றச்சாட்டுகளின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

அது மாத்திரமின்றி இன்னும் இராணுவம் மற்றும் பொலிஸ் பிடியிலிருக்கும் நிலங்களில் எந்தளவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பிலான விவரங்களில், கடந்த அறிக்கைக்கும் தற்போதைய அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் இருந்தாலும், அது குறித்து அரசிடம் அந்த அறிக்கை கேள்வி ஏதும் எழுப்பவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இலங்கையில் இன்னும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நம்பிக்கையின்மை உள்ளதாகக் கூறியுள்ளார்.

“இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்து நம்பிக்கையின்மை நிலவுகிறது. அது போர்க்குற்ற அராஜகங்களாக இருக்கலாம். அண்மைய மனித உரிமை மீறல்கள், ஊழல், அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் நம்பிக்கையின்மை நிலவுகிறது. நாடு முன்னேற வேண்டுமாயின் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்”.

எனினும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில், அதன் ஆணையாளர் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் செய்து நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தாலும், தனது அதிருப்தியை வெளிப்படுத்தவோ அல்லது அது நடைபெறவில்லை என்றால், தண்டனை நடவடிக்கைகள் எடுப்பது பற்றியோ எந்த உத்தேச கருத்தையும் முன்வைக்கவில்லை.

## பிள்ளையானுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஞாயிறு தினத் தாக்குதலுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) தொடர்புபட்டுள்ளார் என்று தெரிவித்த குற்றச்சாட்டையடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அக்கட்சி அழைப்பு விடுத்திருந்தது.

இதையடுத்து கட்சி ஆதரவாளர்கள் நேற்று மட்டக்களப்பு, வாவிகரை வீதியிலுள்ள கட்சி காரியாலயத்துக்கு முன்பாக ஒன்றுதிரண்டு, “பிள்ளையானைக் குறிவைக்காதே”, “ஐ.எஸ். தீவிரவாதிகளைத் தப்ப வைப்பதற்கான சதியா?”, “புகலிடக் கோரிக்கையை நிறைவேற்றப் பொய் சொல்லாதே”, “சனல் 4 ஊடகமே ஆதாரமற்ற குற்றச்சாட்டை அடுக்காதே” போன்ற பல சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பினர்.

அங்கிருந்து பேரணியை ஆரம்பித்த அவர்கள், பிரதான பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைந்தனர். அவர்கள் அங்கிருந்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலைய வீதி சுற்றுவட்டத்தைச் சென்றடைந்து அங்கிருந்து காந்தி பூங்காவை வந்தடைந்து சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனபின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# ஜி-20 உச்சி மாநாடு நிறைவு; அடுத்த தலைமை பிரேசிலிடம்




ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாள் கூட்டம் நேற்று நிறைவடைந்தது. இந்த நிலையில் அடுத்த மாநாட்டை நடத்தும் அதிகாரம் பிரேசிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜி-20 அமைப்பின் இந்த ஆண்டுக்கான தலைமையை இந்தியா ஏற்றிருக்கிறது. இதையடுத்து, இந்தியா முழுவதும் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றன. இந்த நிலையில், ஜி-20 உச்சி மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உட்பட பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையில் இரண்டாம் நாளான நேற்று காலை டில்லி ராஜகாட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் சென்றிருந்தனர். அவர்கள் காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் உலகத் தலைவர்கள் மாநாடு நடைபெறும் பாரத் மண்டபத்துக்கு சென்றனர். அங்கே அவர்கள் மரக்கன்றுகளை நட்டனர். பின்னர் ஜி - 20 உச்சி மாநாட்டில் முக்கிய கருத்தரங்குகள் நடைபெற்றன.

அதன் தொடர்ச்சியாக ஜி-20 கூட்டமைப்பின் அடுத்த மாநாட்டை நடத்தும் அதிகாரத்தை பிரதமர் நரேந்திர மோடி, பிரேசில் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தார். இதன்போது உரையாற்றிய அவர் , டிசம்பர் மாதம் வரை ஜி20 தலைமைப் பொறுப்பில் இருப்பதால் நவம்பரில் காணொளி மூலமாக ஒரு கூட்டத்தை நடத்த விரும்புகிறேன் என்று அறிவித்தார். பின்னர் ஜி20 கூட்டம் நிறைவு பெறுகிறது என்று பிரதமர் மோடி அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

## புதுடில்லியில் இந்து கோயில்களில் வழிபாடுகளில் ஈடுபட்டார் ரிஷி சுனக்







பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இந்து கோயில்களுக்கு சென்று நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவில் ஜி -20 உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், நேற்றைய தினம் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தனது மனைவியான அக்ஷதா மூர்த்தியுடன் புதுடில்லியில் அமைந்துள்ள அக்ஷர்தாம் கோயிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பிரித்தானிய பிரதமராக பதவியேற்றதன் பின்னர் ரிஷி சுனக் இந்தியாவிற்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சந்திரபாபு நாயுடுவுக்கு விளக்கமறியல்



ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட தெலுங்கு தேசக் கட்சித் தலைவரும் ஆந்திர முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடுவை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க ஊழல் தடுப்பு ஆணைய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆந்திராவில் கடந்த 2018 ஆம் ஆண்டு, திறன் மேம்பாட்டு கழகத்தில் 371 கோடி ரூபா பரிமாற்றத்தின்போது ஊழல் இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டில் முன்னாள் முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்திரபாபு நாயுடுவிடம் 10 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் விஜயவாடா மருத்துவமனையில் அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், சந்திரபாபு நாயுடு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து, அவரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

# ஜி 20 மாநாட்டில் கலந்துகொண்டால் புடின் கைது செய்யப்படமாட்டார்!

## - பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ தெரிவிப்பு



அடுத்த வருடம் பிரேசில் தலைநகரில் இடம்பெறவுள்ள ஜி - 20 உச்சிமாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கலந்துகொண்டால் அவர் கைதுசெய்யப்படமாட்டார் என பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜி20 மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு புடினிற்கு அழைப்பு விடுக்கப்படும் என தெரிவித்துள்ள அவர், புடினால் பிரச்சினைகள் இன்றி பிரேசில் வரமுடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டில் ஏன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கலந்துகொள்ளவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

மார்ச் மாதம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விளாடிமிர் புடினிற்கு எதிராக பிடியாணையை பிறப்பித்தது. அவர் உக்ரைனில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டார் என குற்றம்சாட்டியுள்ளது.

இதன் காரணமாக ரஷ்யாவுக்கு வெளியே சென்றால் தான் கைதுசெய்யப்படும் நிலையை புடின் தவிர்க்க விரும்புகின்றார்.

ஆபிரிக்காவில் சமீபத்தில் இடம்பெற்ற பிரிக்ஸ் மாநாட்டை அவர் தவிர்த்தார். கடந்த வருடம் ஐ.சி.சியின் பிடியாணைக்கு முன்னரே அவர் பாலியில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

உக்ரைன் விவகாரம் தொடர்பில் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படுவதை அவர் தவிர்க்க விரும்புகின்றார் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாக்னர் குழுவின் கிளர்ச்சி காரணமாக ரஷ்யாவில் புடினின் பிடியில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், புடினிற்கு பதிலாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஜி - 20 மாநாட்டில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் பேருந்து விபத்து: 6 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்



பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தின் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பகுதியில் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில், 50 பேர் வரை காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றுக்கு மதம் சார்ந்த கூட்டத்திற்கு ஆட்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அமெரிக்கவில் சைபர் தாக்குதல்!

அமெரிக்காவின் கலிபோர்னியா, டென்னசி உள்பட 5 மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள கணனிகளில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல்களினால் 900 இற்கும் மேற்பட்ட கணனிகளில் இருந்து சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேரின் தகவல்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சைபர் தாக்குதல் நடத்தப்பட்ட வைத்தியசாலைகளிலுள்ள சேவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த நோயாளிகள் உடனடியாக வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அங்கு சுகாதார சேவைகள் பெரிதும் முடங்கியுள்ளன என கூறப்படுகிறது. இது குறித்து சைபர் குற்ற பொலிஸ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதன்போது அமெரிக்காவில் வசிக்கும் ரஷியாவை சேர்ந்த 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கனடாவில் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகளை தாக்கிய நோய்க்கிருமி

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்திலுள்ள கால்கரி நகரில் அமைந்துள்ள பல குழந்தைகளுக்கான பகல் நேரக் காப்பகங்களில் ஈ கோலை என்னும் பயங்கர கிருமி தாக்கம் ஏற்பட்டுள் ளது என ஆல்பர்ட்டா சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் சுமார் 142 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் திணைக்களத்தினுடையது போன்ற போலி இணையத்தளத்தினூடாக மோசடி







தபால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் போன்று போலியான இணையத்தளம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதி மோசடி தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தபால் பொதிகளை வழங்குவதாக தெரிவித்து மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டுள்ளது எனத் தபால் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப உதவிப் பணிப்பாளர் காயத்ரி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது போன்ற சம்பவங்கள் குறித்து 1950 எனும் இலக்கத்திற்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை தவிர, 0112 542 104, 0112 334 728 மற்றும் 0112 235978 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கும் அழைத்துத் தகவல்களை வழங்க முடியும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் கணினி குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று காயத்ரி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

# உருளைக்கிழங்குக்கு விதிக்கப்பட்டுள்ள வர்த்தக பொருள்களுக்கான வரி நீடிப்பு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கான விசேட வர்த்தக பொருள்களுக்கான வரி மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 08 ஆம் திகதி முதல் மேலும் 4 மாதங்களுக்கு அது நீடிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கு 50 ரூபா விசேட வர்த்தக பொருளுக்கான வரி, கடந்த மார்ச் 8 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விதிக்கப்பட்டிருந்தது.

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையிலேயே வரி விதிக்கப்பட்டிருந்தது.






# போக்குவரத்து கட்டமைமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்காக தகவல் நிலையம்

போக்குவரத்து கட்டமைமைப்பிலுள்ள பிரச்சினைகளை முன்வைக்கும் வகையில் தகவல் நிலையம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

1958 என்ற இலக்கத்தின் ஊடாக மக்கள் தமது போக்குவரத்துச் சிக்கல்களை முன்வைக்க முடியும் என இலங்கைப் போக்குவரத்து சபையின் பதில் வர்த்தக முகாமையாளர் எரந்த தில்ஹான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி

## பண மோசடி செய்த இடைத்தரகர் கைது!



கட்டார் நாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, நபர் ஒருவரை ஏமாற்றிப் பண மோசடி செய்த நபர் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குக் கிடைக்கப் பெற்ற ஆறு முறைப்பாடுகளுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளி அடிப்படையில் எப்பாவல, எலதிவுலவ்வெவ பகுதியில் உள்ள சந்தேக நபரின் வீட்டில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு முறைப்பாடு செய்த நபர்களிடம் சந்தேக நபர் சுமார் 16 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார்.

அவர் ஓய்வுபெற்ற இராணுவ, விமானப்படை மற்றும் கடற்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளிடமும் இவ்வாறு மோசடியாகப் பணம் பெற்றுக்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர் ஒரு இடைத்தரகர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### முல்லைத்தீவில் பெண் கொலை:

## 5 மாதங்களின் பின் சந்தேகநபர் கைது!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு - உடையார்க்கட்டுப் பகுதியில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் 5 மாதங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் இந்துருவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 60 வயதான நபரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து, எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.





# கிளிநொச்சியில் சிறுவர்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் வேள்ட் விசன் நிறுவனத்தால் சிறுவர்களுக்கான குதூகலிப்புடன் கூடிய அறிவூட்டுதல் எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் (09) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்களில் வேள்ட் விசன் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களின் ஒரு அங்கமாக சிறுவர்களுக்கான குதூகலிப்புடன் கூடிய அறிவூட்டல் எனும் தொனிப் பொருளிலான செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 190 வரையான சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 'உறவுகளும் விடலைப் பருவமும்', 'உணர்வு சார் நுண்ணறிவு', 'ஒழுக்கமும் பொறுப்புக்களும்', 'சகபாடிகளின் அழுத்தம்' போன்ற தலைப்புக்களின் கீழ் கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதாவது சிறுவர்கள் தமது பொழுதுகளை அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியாகவும் கழித்து உடல் உள்ள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் அக்கராயன் பிரதேசத்துக்கு உட்பட்ட 190 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள், வேள்ட் விசன் நிறுவனத்தின் பணியாளர்கள், பகுதி கிராம அலுவலர் மற்றும் பதவி நிலை அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.





# நகைகளை மீட்டுக் கொடுத்த தொழிலாளர்கள் கௌரவிப்பு

(த.சுபேசன்)

தவறுதலாக குப்பையுடன் வந்த தங்க நகைகளை பத்திரமாக மீட்டு உரிமையாளரிடம் கையளித்த சாவகச்சேரி நகர சபையின் சுகாதார தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய ஏற்பாட்டில் சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு உதயசூரியன் மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் வீ.விஜயேந்திரன் சுகாதார தொழிலாளர்களுக்கான கௌரவத்தை வழங்கினார்.

அண்மையில் மீசாலை கிராமத்தை சேர்ந்த குடியிருப்பாளர் ஒருவர் தனது வீட்டில் இருந்த 8 பவுண் தங்க நகைகளை திருடர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காகக் குப்பைகளோடு சேர்த்து கட்டி வைத்திருந்தார்.

இந்த நிலையில் அது தவறுதலாகக் குப்பைகளோடு வீதியில் போடப்பட்டு கழிவகற்றும் வாகனம் ஊடாக தனங்களப்பு வீதியில் உள்ள குப்பை மேட்டில் போடப்பட்டது.

இந்த நிலையில் உரிமையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க நகரசபை நிர்வாகம் நீண்ட நேர தேடுதலின் பின்னர் நகைகளை குப்பையில் இருந்து மீட்டு உரிமையாளரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொடிகாமம் பெரிய நாவலடி வீதிக்கு நடப்பட்டது அடிக்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பெரிய நாவலடி வீதிக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதி தார் வீதியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.



அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் மயூரன், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பொது அமைப்புக்கள் மற்றும்க பலர் லந்துகொண்டனர்.





# பாலையடி விக்னேஸ்வரன் கொடியேற்றம்!

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீபாலையடி விக்னேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் (09) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மகோற்சவ குரு சிவாகம வித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கொடியேற்ற பூசையைச் சிறப்பாக நடத்தினர்.

ஆலய தர்மகர்த்தா இ.தவராசா உள்ளிட்ட பரிபாலன சபையினர் இந்த மகோற்சவத்தை சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்கள்.

தொடர்ச்சியாக 10 நாள்கள் பகல், இரவு திருவிழாக்கள் இடம் பெற்று இறுதி நாள் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவடையும்.

# நாவல் பழ ஆசையால் சிறுவனுக்கு விபரீதம்!

நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மரத்தில் இருந்து தவறி விழுந்து பலத்த காயங்களுக்குள்ளான சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (09) மாலை மூதூரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மூதூர், நடுத்தீவைச் சேர்ந்த 14 வயதான சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

தனது நண்பர்களுடன் நாவல் மரத்தில் ஏறி நாவல் பழம் பறித்துக் கொண்டிருக்கும்போது தவறி விழுந்துள்ளார்.

காயங்களுக்குள்ளான சிறுவன் சிகிச்சைக்காக மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சிறுவன் இடுப்பு எலும்பு முறிவுக்குள்ளாகியுள்ளது என்று வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர் .

தற்போது நாவல்பழக் காலம் என்பதால் பெற்றோர்கள் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயற்படுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






# பாகிஸ்தானின் 58 ஆவது பாதுகாப்பு தின நிகழ்வு

**(அஷ்ரப் ஏ சமத்)**

பாகிஸ்தானின் 58 ஆவது பாதுகாப்பு தினத்தை கொண்டாடும் வகையில் பாகிஸ்தான் தூதரகம் வரவேற்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. கடந்த 7 ஆம் திகதி கொழும்பு ஷங்கரிலா ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இலங்கையின் ஓய்வு நிலை பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல ஜி.டி.எச். கமல் குணரத்ன இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு ஆலோசகர் கர்னல் முஹம்மது ஃபரூக் புக்டி நிகழ்வில் கருத்துரை வழங்கினார்.

பாகிஸ்தானின் தூதரக ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் உமர் ஃபரூக் பர்கி வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

பாகிஸ்தான் பாதுகாப்பு தினத்தை நினைவு கூரும் கேக் ஒன்றும் பிரதம விருந்தினர், பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்புப் படைத் தலைவர், முப்படைகளின் தளபதிகள், பாகிஸ்தான் தூதுவர் மற்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரால் கூட்டாக வெட்டப்பட்டது.



# சாரணிய பயிற்சி முகாம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் இரண்டு நாள் சாரணிய பயிற்சி முகாமின் ஆரம்ப நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதி அதிபர் எம்.ஏ. சலாம், தேசிய சாரணிய பயிற்றுவிப்பாளர் மேஜர் கே.எம்.தமீம் , உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர் எஸ்.தஸ்தகீர், சாரணிய பயிற்றுவிப்பாளர்களான எம்.எஸ்.எம்.ஹஸ்மின், எஸ்.எம்.சிராஜ், ஆரம்ப பிரிவு பொறுப்பாளர் ஏ.ஸி.எம். நழீம், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.ஏ.எம்.றியாழ், பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் எம்.ஏ.எம். ஜிப்ரி, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களான இஸட்.எம்.சனூஸ், எஸ்.என்.ஹஸ்மி, எச்.எம்.சப்ராஸ் மற்றும் சாரணிய குழு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# நத்தைகளின் தாக்கத்தால் பயிர்களுக்குப் பெரும் சேதம்

**(அஸ்ஹர்இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துவரும் நத்தைகளால் மேட்டு நிலப் பயிரினங்கள் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிரினங்கள் அதிகளவில் அழிவுக்கு உள்ளாகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமன , இறக்காமம், குடுவில், செங்காமம், நாமல் ஓயா , மகா ஓயா , பதியத்தலாவ போன்ற இடங்களில் நத்தைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

பயிர்களின் இளம் தண்டுகளும், இலைகளும் நத்தைகளால் உணவாக உட்கொள்ளப்படுவதால் பயிர்கள் வாடி அழிவடைந்து விடுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளால் வீட்டுதோட்ட முயற்சியாளர்கள் தமது பயிர்ச் செய்கையை கைவிட வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.09.2023




இன்று சலிப்பூட்டும் நாளாக இருக்கும். என்றாலும், திட்டமிட்டு புத்திசாலித்தனத்துடன் செயலாற்றினால் உங்கள் முயற்சியில் வெற்றி நிச்சயம்.

பணியில் இன்னல்களை சந்திப்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் நீங்கள் மேற்கொண்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்கள் ஏற்படாமலிருக்க அமைதி காக்க வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உபரி பணத்தை முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். தலைவலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். நேரத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன் படுத்துவீர்கள். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் பிறரை காந்தம் போல கவர்ந்திழுக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் பணிக்கான நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருப்பீர்கள்.

நிதியைப் பொறுத்த வரை இன்று சுதந்திரமான நிலை காணப்படும். எதிர்கால நலனுக்கான பயனுள்ள நிதி சம்பந்தமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படுகின்றது. பெரிய அளவிலான ஆரோக்கிய குறைபாடுகள் ஏதும் இருக்காது.




இன்று எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும்.

பணியிடச் சவால்களை சந்திக்க பொறுமை அவசியம். பணியில் வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரணையான போக்கு தேவை. உங்கள் துணையை நகைச்சுவையான அணுகுமுறையோடு அணுகி அவரை மகிழ்விக்க வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். சிறப்பாக திட்டமிட முயலுங்கள்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம்.




இன்று உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இறைவழிபாடு, ஸ்லோகம் கூறுவது ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும். இன்று அதிக பொறுப்புகளும் மன உளைச்சல்களும் இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் செயல் திறன் உங்களுக்கு திருப்தியை அளிக்காது. பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது.

குழப்பமான மன நிலை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவுமுறையை பராமரிக்க மாட்டீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பெரிய அளவிலான முதலீடுகள் செய்ய எடுக்கும் முடிவுகளை தவிர்க்கவும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடலாம். அமைதியாக இருக்க ஒரே வழி பிரார்த்தனை ஆகும்.

இன்று பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்வீர்கள். இதனால் உறவின் மகிழ்ச்சி பாதிப்படையும்.

பணப் புழக்கும் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகளைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்படுவீர்கள். உடற்பயிற்சி உங்களை திடமாக வைத்திருக்க உதவும்.




இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் நலனை மேம்படுத்தும் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல் திறன் அதிகரித்துக் கொள்வதற்கான புதிய வழிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான அன்புப் பிணைப்பு வலுப்பெறும் வகையில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்தி அளிக்கும். நீண்ட கால நிலுவை தொகைகள் உங்கள் கைக்கு வந்து சேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




திட்டமிட்ட முறையான அணுகுமுறை மூலம் இன்றைய நாளை மதிப்பு மிக்க தாக்குவீர்கள். உங்கள் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் சிறந்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி பெற புத்திசாலித் தனத்தை பயன்படுத்துங்கள்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துனையுடன் மகிழ்ச்சி, இனிமை, நகைச்சுவை என உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே அன்பு அதிகரிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். சிறிய அளவிலான கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.




இன்று தேவையற்ற மனக் கவலைகள் காணப்படும். அதனை தவிர்க்கவும். நேர்மையான எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். இது ஏற்படாமல் இருக்க கவனம் தேவை.

மனக் குழப்பங்கள் அதிகம் காணப்படுவதால் அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டும்.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. சில இழப்புகள் காரணமாக ஏமாற்றத்தை சந்திப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பது கடினம். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -11.09.2023




இன்று அமைதியும் கட்டுப்பாடும் தேவை. முடிவுகள் எடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்கவும். பிரார்த்தனை மற்றும் நல்ல இசை மன திற்கு ஆறுதலும் திருப்தியும் அளிக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்பு காரணமாக பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணியிடத்தில் அசௌகரியம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை தவிர்க்க வேண்டும். இதனால் உறவு வலுப்படும். உங்கள் துணையுடன் அனுசரித்து போக வேண்டும்.

இன்று பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். லாபங்கள் அதிகரிக்கும். புத்திசாலிதனத்தை பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம்.

உங்களின் நம்பகமான சிறந்த பணி காரணமாக நற்பெயர் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இருவரிடையே காணப்படும் பிணைப்பும் அன்பை பகிர்ந்து கொள்ளும் தன்மை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சி யும் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக காணப்படுகின்றது. லாபகரமான முதலீட்டிற்கான முயற்சி உங்களுக்கு நல்ல பலனைத் தரும்.

இன்று தேக ஆரோக்கியம் சிறந்து காணப்படும். இன்று இன்பமாக இருப்பதன் காரணமாக ஆரோக்க-ியம் சிறந்து காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்கலாம். சமயோசிதமாக செயலாற்றி னால் இன்று உற்சாகமாக இருக்கலாம்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதி காரியிடமிருந்து எதிர்பாராத ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவர்க்கும் இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறந்து காணப்படும். மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று உற்சாகமான சூழ்நிலை காணப்படும். என்றாலும் எச்சரிக்கை யுடன் இருக்கவேண்டும். சரியாக திட்டம-ிட்டால் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணியாளர் களுடன் பிரச்சினைகள் உண்டாகும். பொறுமையுடன் இருந்தால் அதனை சமாளித்து உங்கள் பணிகளை ஆற்றலாம்.

தகவல் பரிமாற்றத்தில் இருக்கும் குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட வேறுபாடு பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் தேவைக்காக கடன் வாங்க நேரலாம். அதிகரிக்கும் செலவுகள் உங்க ளுக்கு வருத்தத்தை அளிக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park